17.09.2025.

# கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

# விழுப்புரம்.

# SC No. 375/2021

அ.சா.15

**பெயர். திரு.எஸ்.ஆறுமுகம்**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :-

ராஜா த/பெ. ராஜேஷ் என்பவர் உறவினர் வீட்டிற்கு சென்று திரும்பும் போது பார்த்ததாக சொல்கிறார் என்றும், அதுபோன்று அவர் எதில் சென்றார், எப்போது திரும்பி வந்தார் என்ற விவரங்களை எங்களது காவல்துறை விசாரணையில் சொல்லியுள்ளாரா? என்றால், சொல்லவில்லை. சாட்சி ஜெயகணேஷ் என்பவர் சாட்சி நதியாவிற்கு என்ன உறவு என்று விசாரணை செய்தேனா? என்றால், இறந்து போன ஐயப்பனுக்கு மாமா முறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் நதியாவிற்கு என்ன உறவு முறை என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. 25/04/2021 க்கு முன்பு 3 நாட்களுக்கு முன்பே ஜெயகணேஷ் நதியாவை சிவபெருமான் பாளையத்தில் விட்டு விட்டு சென்று விட்டதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா? என்றால் இல்லை. 25/04/2021 ல் ஐயப்பனை எதிரிகள் மதியம் ஒரு மணிக்கு தாக்கியதாக நதியா அண்ணா தன்னிடம் தகவல் சொன்னதாக ஜெயகணேஷ் எங்களது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன ஐயப்பன் விஜயகுமாரை தாக்கியதற்கு பின்னிட்டு, 1 வது எதிரி அ.சா.1 வீட்டிற்கு சென்று ஐயப்பனை வெட்டி விடுவேன் என்று மிரட்டியதாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால்தான் நதியா பயந்து

கொண்டு அவரது அம்மா வீட்டிற்கு சென்று விட்டதாக அவர் காவல்துறை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஐயப்பனின் அக்கா மகள் பகல் 11.00 மணிக்கு ஐயப்பனை எதிரிகள் தாக்கியதாக இளையராஜாவிற்கு தகவல் சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரிதான். முனியம்மாளின் வீடு மாரியம்மன் கோயில் தெரு என்றால் சரிதான். அ.சா.1 வசிப்பது கங்கை அம்மன் கோயில் தெரு என்றால் சரிதான். இடைப்பட்ட தூரம் 50 மீட்டர் இடைவெளி என்றால் சரிதான். 50 மீட்டர் தூரத்தில் உள்ள நதியாவிற்கு அவர் தாக்கப்படுகிறார் என்ற தகவல் யார் மூலம் தெரிய வந்தது என்றால், சத்தம் கேட்டு ஓடி வந்ததாகத்தான் தெரிவித்தார். நதியா பண்டக சோழநல்லூர் எப்போது சென்றார் என்றும், மீண்டும் சிவபெருமான் பாளையத்திற்கு எப்போது வந்தார் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். நதியாவின் 3 வது வாக்குமூலத்தில் 1, 2 எதிரிகள் ஐயப்பனை திருக்கனூரில் இருந்து 10 மணிக்கும், அ.சா.2 கோபாலகிருஷ்ணன், அ.சா.3 பிரகாஷ், ஆகியோர்களுடைய வாக்கு மூலத்தில் 1, 2 எதிரிகள் ஐயப்பனை திருக்கனூரில் இருந்து 11 மணிக்கும் அழைத்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால், வாக்குமூலத்தில் அப்படித்தான் உள்ளது. இந்த கால அளவுகளை யார் மூலமாக கோபாலகிருஷ்ணனும், சாட்சி பிரகாஷ் மற்றும் நதியா ஆகியோர் தெரிந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதை யார் மூலம் தெரிந்து கொண்டார்கள் என்று அவரது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.7 முத்துகிருஷ்ணன் பக்கிரிபாளையத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் ஐயப்பனுக்கு என்ன உறவு முறை என்பதை விசாரணை செய்தேனா? என்றால், ஐயப்பன் அவருக்கு மாமா உறவு முறை ஆவார். அவர்கள் தங்களது வாக்குமூலத்தில், சாட்சிகள் கோபாலகிருஷ்ணன், மற்றும் பிரகாஷ் ஆகியோர்கள் ஐயப்பனின் அலறல் சத்தம் கேட்டு, சாட்சிகள் அ.சா.1 நதியாவிடம் ஓடி ஐயப்பனை தூக்கியது போல எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.7 முத்துகிருஷ்ணன் அ.சா.2 கோபாலகிருஷ்ணன் தனக்கு தகவல் சொன்னதாக அவருடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். அ.சா.8 செல்வகுமார் த/பெ கார்த்திகேயன் பக்கிரிபாளையத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் தனது வாக்கு மூலத்தில் சம்பவ தேதியில் செல்வகுமாரின் பாட்டி வீடு

திருக்கனூர் என்று சொல்லியுள்ளாரா? என்றால், சொல்லவில்லை. அவர் சம்பவ இடமான திருக்கனூர் மாரியம்மன் கோயில் ஆலமரத்திற்கு கீழே அன்றைய தேதியில் எதற்கு போனார் என்பதை விசாரித்தேனா? என்றால் இல்லை. மருத்துவர் மதுவர்தனாவிடம் ஆயுதங்களை காண்பித்து எந்தெந்த ஆயுதங்கள் தாக்கியதால், எந்தெந்த காயங்கள் ஏற்பட்டது என்பதற்கு சட்ட கருத்துரை எதையாவது பெற்றேனா? என்றால், எந்த கருத்துரையும் பெறவில்லை. சாட்சி வெங்கடேசன் தலைமை காவலருக்கு பிரேதத்தை ஒப்படைப்பதற்கு நான் பாஸ்போர்ட் வழங்கியுள்ளேனா என்றால், இல்லை. அந்த பாஸ்போர்ட் வரிசை எண் நீதிமன்றத்திற்கு அளிக்கவில்லை என்றால், பாஸ்போர்ட் கொடுத்து விட்டேன். அதை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. பிணக்கூராய்விற்கு பிறகு அவர் பிரேதத்தை யார் வசம் ஒப்படைத்தார் என்பதை, அவரது காவல்துறை வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளேனா? என்றால், உறவினர் வசம் ஒப்படைத்ததாக குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தை யார் பதிவு செய்தது என்றால், கணினி காவலர் மூலம் பதிவு செய்தேன். எங்கு வைத்து பதிவு செய்தேன் என்றால், பனையபுரம் ஜங்ஷனில் வைத்து பதிவு செய்தேன். அதன் நகல்களை எங்கு எடுத்தேன் என்றால், பனையபுரத்தில் உள்ள கணினி மையத்தில் வைத்து எடுத்தேன். தற்போது ஒப்புதல் வாக்கு மூலங்களை பதிவு செய்த காவலரின் பெயர் என்ன என்றும், அவரை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால், சாட்சியாக சேர்க்கவில்லை. அவர் பெண் காவலர் தனம் ஆவார். பனையபுரத்தில் அந்த வாக்குமூலங்களை பிரிண்ட் அவுட் எடுப்பதற்கான ரசீதுகளை நாங்கள் வாங்கவில்லை. அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர்கள் தென்பேர் கிராமத்திற்கு சென்றதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அது விக்கிரவாண்டிலிருந்து சுமார் 10 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். தென்பேர் கிராமம் செஞ்சி-திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியது போல உள்ளது என்றால் சரிதான். தென் பேரில் இருந்து சிவபெருமான் பாளையம் வரவேண்டும் என்றால், விக்கிரவாண்டி டோல்கேட்டை தாண்டினால் தான் பனையபுரம் ஜங்ஷன் வரும்

என்றால் சரிதான். இந்த இரு மார்க்கங்களிலும் சென்னைக்கு செல்வதற்கான பேருந்து வசதிகள் உள்ளது என்றால் சரிதான். பனையபுரம் வரவேண்டும் என்பதற்கான சிறப்பான காரணங்கள் எதையாவது சொல்லியுள்ளார்களா? என்றால் இல்லை. அவருடைய வாக்குமூலத்தில் கூட ஐயப்பன் திருக்கனூர் ஏரிக்கரையில் எங்கு தங்கியிருந்தார் என்றும், அவரை அழைத்து வரும்போது சாட்சி கனகாவோ, அல்லது ராஜா த/பெ ராஜேஷ் ஆகியோர் பார்த்ததாகவோ, எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பதிவிட்டது போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்கு மூலத்தை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விசாரணை என்ற பெயரில் எதிரிகளை அழைத்து சென்று, நான் வழக்கிற்கு ஏற்றவாறு காவல் நிலையத்தில் கணினி மயமாக தயாரிக்கப்பட்ட எதிரிகளை துன்புறுத்தி, அச்சுறுத்தி கையெழுத்து வாங்கினேன் என்றால் சரியல்ல. இறுதி அறிக்கையில் 2ம் எதிரியின் மனைவி விஜயகுமாரிக்கும், அ.சா.1 நதியாவிற்கும் இடையில் ஏதோ பிரச்சனை இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். நான் விசாரித்த பட்டியல் சாட்சிகள் யாராவது அது போன்று 2ம் எதிரியின் மனைவி விஜயகுமாரிக்கும், அ.சா.1 நதியாவிற்கும் பிரச்சனை இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்களா? என்றால் இல்லை. எனது இறுதி அறிக்கையில் அந்த மருத்துவமனையில், எத்தனை மணிக்கு, எங்கு வைத்து, அந்தத் திட்டத்தை வகுத்தார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். 4ம் எதிரி அவரை தீர்த்து கட்டுங்கடா என்று சொன்னதாக எனது இறுதி அறிக்கையில் இல்லை என்றால், சரிதான். சொல்லவில்லை. 1ம் எதிரி ஐயப்பன் தங்கி இருந்த இடத்தை எப்படி தெரிந்து கொண்டார் என்பதைக் குறித்து நான் இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். 3ம் எதிரிக்கு சட்டப்பிரிவு 364 படி குற்றச்சாட்டு சுமத்தியுள்ளேன் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் அவருக்கு அப்படி குற்றச்சாட்டு சுமத்தியுள்ளேன் என்றால், அவர் கூட்டு சதியில் ஈடுபட்டுள்ளதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். எனது இறுதி அறிக்கையில் கனகா குறி சொல்லும் மாரியம்மன் கோயில் பக்கத்தில் ஐயப்பன் தங்கி இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 4வது எதிரி எப்போது எங்கே மற்ற எதிரிகளுடன் சேர்ந்து

திட்டமிட்டார் என என்னுடைய இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். 4 எதிரிகளும் சம்பவம் நடந்ததாக சொன்ன சமயத்தில் ஐயப்பனை அடித்துக் கொல்லுங்கள் என்று சத்தம் போட்டது போல எதையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதே போல் கண்ணுற்ற சாட்சிகளாக சொல்லப்படும் நதியா, கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோரும் தங்களது வாக்குமூலங்களில் இதுபோன்று சொன்னதாக குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். நான் தற்போது வழக்கில் முன்னிலைப்படுத்தியுள்ள ஆயுதங்களை சாட்சிகள் நதியா, கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோரிடம் காண்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை என்றால், அவர்களிடம் காண்பித்தேன். ஆனால் வாக்குமூலத்தில் பதிவு செய்யவில்லை. எந்த தேதியில் எங்கு வைத்து காண்பித்தேன் என்பதற்கு ஏதாவது தனி அறிக்கை போட்டுள்ளேனா? என்றால், தனி அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கவில்லை. நதியா, கோபாலகிருஷ்ணன் மற்றும் பிரகாஷ் ஆகியோராவது தங்களது வாக்குமூலங்களில் இதுபோன்று 3 நபர்களிடம் இந்த வழக்கில் சமர்ப்பித்த ஆயுதங்களை காண்பித்தது போல சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பிள்ளையார் கோயில் வாட்டர் டேங்க் அருகில் 4 எதிரிகளும் ஐயப்பனை தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆயுதங்களால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால், சரிதான். குறிப்பிட்டு சொல்லவில்லை. இறுதி அறிக்கையில் 3ம் எதிரி ஐயப்பனை ஆயுதத்தைக் கொண்டு உடலின் எந்தப் பகுதியில் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், குறிப்பிட்டு சொல்லவில்லை. சரிதான். நான் இந்த வழக்கில் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றும், உதவி ஆய்வாளர் பரணிதரன் அவர்கள் அ.சா.1 ன் கணவர் ஐயப்பன் காணாமல் போய் எங்கோ அடிபட்டு கிடந்தவரை ஏற்கனவே 2ம் எதிரியின் மனைவி விஜயகுமாரியை ஐயப்பன் தாக்கியதாக ஒரு வழக்கு நிலுவையில் இருந்ததால், அதற்கு பழிவாங்கும் நோக்கத்தோடு எதிர் வழக்காக அ.சா.1 மற்றும் ஐயப்பனின் உறவினர் காவலர் கன்னியப்பன் என்பவரின் உதவியுடன் கொடுக்கப்பட்ட பொய் புகாரின் அடிப்படையில் இந்த வழக்கை உதவி ஆய்வாளர் பரணிதரன் அவர்கள் பதிவு செய்து சட்டத்திற்கு முரணான வகையில் வழக்கு

விசாரணையை செய்து, கோப்புகளை நிலையத்தில் கணினி மூலமாக தயார் செய்து வைத்த ஆவணங்களில் நான் கையொப்பம் மட்டும் போட்டு, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும், அவர்கள் அது தொடர்பாக எந்த ஒப்புதல் வாக்குமூலங்களையும் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் வழக்கில் நான் ஆஜர் படுத்தியுள்ள ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், வழக்கிற்காக உதவி ஆய்வாளர் பரணிதரன் அவர்கள் ஜோடித்து வைத்த தடயங்கள் தான் அது என்றும், ஐயப்பன் காயம் பட்டு இறந்ததற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை.**